## வட மாநிலங்களில் கனமழை - உயிரிழந்தோர் எண்ணிக்கை 100 ஆக அதிகரிப்பு



**புதுடெல்லி:** வட மாநிலங்களில் கனமழை தொடரும் சூழலில் செவ்வாய்க்கிழமை மட்டும் 20 பேர் உயிரிழந்தனர். இதனால் வடமாநிலங்களில் மழை, வெள்ள பாதிப்புகளால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 100 ஆக அதிகரித்துள்ளது.

இமாச்சலப் பிரதேசத்தில் மட்டும் பலி எண்ணிக்கை நேற்று ஒரே நாளில் 31 ஆகப் பதிவாகியிருந்தது. இதுவரை அங்கு பருவமழைக் காலம் தொடங்கியதிலிருந்து 80 பேர் உயிரிழந்துள்ளனர். உத்தராகண்டில் 5, உத்தரப் பிரதேசம், பஞ்சாப், ராஜஸ்தானில் தலா ஒன்று என உயிர்ப்பலிகள் பதிவாகியுள்ளன.

**மோசமாக பாதிக்கப்பட்ட இமாச்சலப் பிரதேசம்:** கடந்த 3 நாட்களில் கனமழை, வெள்ளம், நிலச்சரிவு என இமாச்சலப் பிரதேசம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. மூன்று நாட்களில் 31 பேர் நிலச்சரிவின் காரணமாக இறந்துள்ளனர். 1300 சாலைகள் சேதமடைந்துள்ளன. 40 பாலங்கள் சிதைந்துள்ளன. 79 வீடுகள் முற்றிலுமாக தரைமட்டமாகின. 333 வீடுகள் பகுதியாக சேதமடைந்துள்ளன. சிம்லா - மனாலி, சண்டிகர் - மனாலி, சிம்லா - குல்கா தேசிய நெடுஞ்சாலைகள் மூடப்பட்டதால் மக்கள் அத்தியாவசியப் பொருட்கள் கிடைக்காமல் திண்டாடும் சூழல் ஏற்பட்டுள்ளது. இதுவரை இமாச்சலப் பிரதேசத்தில் மட்டும் 80 பேர் உயிரிழந்துள்ளனர். அனைத்துப்

EVA STALIN IAS

பள்ளிகளுக்கும் ஜூலை 15 வரை விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. மாநில தேர்வாணையம் நடத்தும் தேர்வு ஆகஸ்ட் 20 ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

**இன்றைய மழை நிலவரம்:** இன்று அருணாச்சலப் பிரதேசம், அசாம், மேகாலயா, சிக்கிம் மாநிலங்களில் அதிகனமழைக்கு வாய்ப்புள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதேபோல், பிஹார், உத்தரப் பிரதேசம், உத்தராகண்ட் மற்றும் மேற்கு மத்தியப் பிரதேசத்தில் அதிகனமழை பெய்யும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது. ஜார்க்கண்ட், கிழக்கு மத்தியப் பிரதேசம், விதர்பா, கொங்கன், தெலங்கானா, கோவா, கடலோர ஆந்திரப் பிரதேசம், கடலோர கர்நாடகா, கேரளா மற்றும் மாஹேவில் ஆங்காங்கே கனமழைக்கு வாய்ப்புள்ளதாகக் கணிக்கப்பட்டுள்ளது. மேற்கு தொடர்ச்சி பருவமழை மற்றும் பருவக்காற்று சங்கமிப்பதால் வரலாறு காணாத அளவுக்கு மழை பெய்து வருவதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வானிலை ஆய்வு மைய கணிப்பின்படி 23 மாநிலங்களில் கன மற்றும் மிக கன மழை பெய்யும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**நிலவு மற்றும் பிரபஞ்சத்தின் அதிசயங்களை சந்திராயன் 3 வெளிக்கொண்டு வர உள்ளது: ஜிதேந்திரசிங்**




**புதுடெல்லி:** நிலவு மற்றும் பிரபஞ்சத்தின் அதிசயங்களை, சந்திரன் குறித்த புதிய பார்வையை சந்திரயான் 3 உலகிற்கு வழங்கும் என்று மத்திய அமைச்சர் ஜிதேந்திரசிங் தெரிவித்துள்ளார்.

மத்திய தகவல் தொழில்நுட்பம், பிரதமர் அலுவலகம் மற்றும் விண்வெளித்துறை இணையமைச்சர் ஜிதேந்திரசிங், நாளிதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியில், "நிலவின் மேற்பரப்பில் தண்ணீர் இருந்ததற்கான ஆதாரங்களை உலகிற்கு வெளிக்கொண்டு வந்து பல்வேறு புதிய அம்சங்களுக்கு அடிகோலியது சந்திரயான்-1 திட்டம். தற்போது சந்திரன் -3 திட்டத்தின் மீது ஒட்டுமொத்த உலகமும் மிகப்பெரிய எதிர்பார்ப்பு மற்றும் நம்பிக்கைக் கொண்டிருக்கிறது. இந்த திட்டத்தின் மூலம், புதிய அம்சங்கள், நிலவு மற்றும் பிரபஞ்சத்தின் அதிசயங்களை சந்திராயன் 3 வெளிக்கொண்டு வர உள்ளது.

சந்திரயான் -3 விண்கலத்தின் சமிக்ஞைகள் நிலவில் ஒரு படி மேலும் நெருங்கும். நிலவைப் பற்றி ஆராய்ச்சியில் மற்ற நாடுகளை விட இந்தியா பின் தங்கவில்லை என்பதை நிரூபித்துக் காட்டும். சந்திரயான் -3 இல் உள்ள தனித்துவமான அம்சங்கள் நிலவில் இருந்து நிலவை மட்டும் கண்காணிப்பதோடு மட்டுமல்லாமல், நிலவிலிருந்து பூமியையும் கண்காணித்து விண்வெளி துறையில் சாதித்துள்ள பெருமைமிக்க பட்டியலில் இந்தியாவும் இடம்பெறும்.

பிரதமர் நரேந்திர மோடியின் அமெரிக்கப் பயணத்தின் மூலம் விண்வெளி ஆராய்ச்சியில் இந்தியா தனக்கு நிகரான நட்பு மற்றும் ஒத்துழைப்பு தரும் நாடு என்பதை அமெரிக்கா தெளிவாக்கி உள்ளது. மேலும், நாசா, இந்திய விண்வெளி ஆராய்ச்சியாளர்களின் கருத்துக்களை பெறுவது மற்றும் ஆர்டிமிஸ் ஒப்பந்தத்தில் இந்தியா ஒரு பங்குதாரராக இருப்பது ஆகியவை இந்தியாவின் தலைசிறந்த விண்வெளி ஆராய்ச்சிக்கு எடுத்துக்காட்டாகும்.

இந்திய விண்வெளி தொழில்நுட்பம் ராக்கெட் ஏவுதலோடு மட்டுமில்லாமல், பல்வேறு துறைகளில் முன்னேற்றத்தையும் அளித்து வருகிறது. இந்தியா கடந்த ஆறு தசாப்தங்களாக விண்வெளி திட்டங்களில் தனது வளமிக்க விண்வெளி ஆராய்ச்சி தொழில்நுட்பங்களை சிறப்பாக பயன்படுத்தி உள்ளது. மேலும், இன்றைய காலகட்டத்தில் அன்றாட வாழ்க்கையில், குறிப்பாக அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், தொலைத்தொடர்பு, விவசாயம், கல்வி, மருத்துவம், ஊரக வளர்ச்சி, பேரிடர் எச்சரிக்கை மற்றும் தணிப்பு, காலநிலை மாற்றம், திசையறிதல், பாதுகாப்பு மற்றும் ஆளுகை உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் விண்வெளி தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

அமிர்த காலத்தின் அடுத்த 25 ஆண்டுகளில் இந்தியாவின் மேம்படும் விண்வெளி மற்றும் விண்வெளி பொருளாதாரம் ஆகியவை எதிர்காலத்தில் ஒட்டுமொத்த பொருளாதார முன்னேற்றத்திற்கான முக்கிய தூணாக



EVA STALIN IAS ACADEMY

இருக்கும். 424 வெளிநாட்டு செயற்கைக்கோள்கள் இந்தியா மூலம் ஏவப்பட்டுள்ளன. இவற்றில் 389 செயற்கைக்கோள்கள் பிரதமர் நரேந்திர மோடியின் கடந்த 9 ஆண்டு கால ஆட்சியில் செலுத்தப்பட்டுள்ளன. மேலும், செயற்கைக்கோள்களை ஏவியதன் மூலம் 174 மில்லியன் அமெரிக்க டாலர் வருவாய் கிடைத்துள்ளது. இதில் 157 மில்லியன் அமெரிக்க டாலர் கடந்த 9 ஆண்டு காலத்தில் ஈட்டப்பட்டவை" என்று தெரிவித்துள்ளார்.

**கடந்த 15 ஆண்டுகளில் 41.5 கோடி இந்தியர்கள் வறுமையிலிருந்து மீண்டனர்**



**நியூயார்க்:** ஐ.நா. மேம்பாட்டு திட்ட அமைப்பு உலகளாவிய பல்பரிமாண வறுமைக் குறியீட்டை வெளியிட்டுள்ளது. கடந்த 15 ஆண்டுகளில் உலக அளவில் 25 நாடுகள் பல்பரிமாண வறுமையை பாதியாகக் குறைத்துள்ளன என்று அந்த அறிக்கையில் ஐநா தெரிவித்துள்ளது.

சுகாதாரம், கல்வி, வாழ்க்கைத் தரம் ஆகியவற்றின் அடிப்படையில் பல்பரிமாண வறுமை கணக்கிடப்படுகிறது. 2000 முதல் 2022 வரையிலான காலகட்டத்தில் 81 நாடுகளில் நிகழ்ந்த மாற்றங்களை ஐ.நா. மேம்பாட்டு திட்ட அமைப்பும் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகமும் ஆய்வுக்கு எடுத்துக்கொண்டன.

அந்த ஆய்வின்படி, கடந்த 15 ஆண்டுகளில் 25 நாடுகள் தங்கள் நாட்டில் நிலவிய பல்பரிமாண வறுமையை பாதியாகக் குறைத் துள்ளன. குறிப்பாக இந்தியாவில், 2006 முதல் 2021 வரையிலான 15 ஆண்டு காலகட்டத்தில் 41.5 கோடி பேர் பல்பரிமாண வறுமையிலிருந்து விடுபட்டுள்ளனர்.

இது குறிப்பிடத்தக்க அளவிலான மேம்பாடு என்று அந்தஅறிக்கையில் தெரிவிக்கப்பட் டுள்ளது.

**வில்வித்தையில் தங்கம் வென்று பார்த் சலுங்கே சாதனை**




பார்த் சலுங்கே மற்றும் பதக்கம் வென்ற வீரர்கள்

**லிமெரிக்:** இளையோருக்கான உலக வில்வித்தை சாம்பியன்ஷிப்பில் ஆடவருக்கான ரீகர்வ் பிரிவில் இந்தியாவின் பார்த் சலுங்கே தங்கப் பதக்கம் வென்று சாதனை படைத்தார்.

அயர்லாந்தில் உள்ள லிமெரிக் நகரில் இளையோருக்கான உலக வில்வித்தை சாம்பியன்ஷிப் போட்டி நடைபெற்றது. இதில் 21 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆடவர் ரீகர்வ் பிரிவில் இந்தியாவின் பார்த் சலுங்கே இறுதிப் போட்டியில் 7-3 என்ற கணக்கில் கொரியாவின் சாங் இன்ஜுனை தோற்கடித்து தங்கப் பதக்கம் வெற்றார்.

இதன் மூலம் இளையோருக்கான உலக வில்வித்தையில் ரீகர்வ் பிரிவில் தங்கப் பதக்கம் வென்ற முதல் இந்திய வீரர் என்ற சாதனையை படைத்தார் பார்த் சலுங்கே. 21 வயதுக்கு உட்பட்டோருக்கான மகளிர் ரீகர்வ் பிரிவில் இந்தியாவின் பாஜா கவுர் 7-1 என்ற கணக்கில் சீன தைபேவின் சு ஷின் யுவை வீழ்த்தி வெண்கலப் பதக்கம் வென்றார்.

இளையோருக்கான உலக வில்வித்தை சாம்பியன்ஷிப் தொடரை இந்தியா 6 தங்கம், ஒரு வெள்ளி, 4 வெண்கலம் என 11 பதக்கங்களுடன் பட்டியலில் 2-வது இடம் பிடித்து நிறைவு செய்தது. கொரியா 6 தங்கம், 4 வெள்ளி பதக்கங்களுடன் முதலிடம் பிடித்தது.

## தூய்மைப் பணியாளர் நலவாரியத்தின் 500 உறுப்பினர்களுக்கு ரூ.55 கோடியில் மானியத்துடன் வீடு: ஆதிதிராவிடர் நலத்துறை செயலர் தகவல்



**சென்னை:** தூய்மைப் பணியாளர்கள் நலவாரியத்தில் பதிவு செய்தவர்களில் வீடற்ற 500 உறுப்பினர்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தில் ரூ.55 கோடியில் பயனாளிகள் பங்களிப்புடன் கூடிய வீடுகள் வழங்க மானியம் வழங்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலவாரிய செயலர் வெளியிட்ட செய்திக்குறிப்பு: சட்டப்பேரவையில், இந்த ஆண்டுக்கான பட்ஜெட் கூட்டத்தொடரில் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ், 'தூய்மைப் பணியாளர்கள் நலவாரியத்தில் பதிவு செய்துள்ள வீடற்ற 500 உறுப்பினர்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு திட்டத்தின் வீடுகள் தூய்மைப் பணியாளர் நலவாரிய மானியத்துடன் ரூ.55 கோடி மதிப்பில் வழங்கப்படும்'' என அறிவித்தார்.

இந்த அறிவிப்பை செயல்படுத்தும் வகையில், தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நலவாரியத்தில் பதிவு செய்துள்ள வீடற்ற 500 உறுப்பினர்களுக்கு தகுதியின் அடிப்படையில் ரூ.55 கோடி மதிப்பில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலம் கட்டப்படும் பயனாளிகள் பங்களிப்புடன் கூடிய வீடுகள் வாங்க மானியம் வழங்கி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுஉள்ளது.

## மருந்து, மருத்துவ உபகரணங்கள் தொடர்பாக உலக சுகாதார நிறுவனத்தின் 3 நாள் பயிலரங்கம்: சென்னையில் தொடங்கியது

**சென்னை:** மருந்து, மருத்துவ உபகரணங்கள் கொள்முதல் மற்றும் விநியோகத்தை மேம்படுத்துவது தொடர்பான உலக சுகாதார நிறுவனத்தின் தென்கிழக்கு ஆசிய பிராந்தியத்தின் மூன்று நாள் பயிலரங்கு சென்னையில் நேற்று தொடங்கியது. தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தின் (டிஎன்எம்எஸ்சி) நிர்வாக நடவடிக்கைகளை நேரில் கள ஆய்வு செய்யும் வகையில் அந்த பயிலரங்கத்தின் நிரல் வடிவமைக்கப்பட்டுள்ளது.

நூற்றுக்கும் மேற்பட்ட மருத்துவ நிபுணர்கள், மருத்துவப் பிரதிநிதிகள், உலக சுகாதார நிறுவன நிர்வாகிகள் பயிலரங்கில் கலந்துகொண்டனர். தமிழக சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், செயலாளர் ககன்தீப் சிங் பேடி, உலக சுகாதார நிறுவனத்தின் தென்கிழக்கு ஆசிய பிராந்திய சுகாதார இயக்குநர் மனோஜ் ஜலானி ஆகியோர் பங்கேற்று உரையாற்றினர். தொடர்ந்து பல்வேறு தலைப்பிலான அமர்வுகளில் துறைசார் வல்லுநர்கள் உரையாற்றினர்.

**தரமான மருத்துவ சேவை:** இந்த பயிலரங்கில் தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தின் கீழ் உள்ள மருந்து கிடங்குகளின் செயல்பாடுகளை நேரில் கண்டறிவதற்கான வாய்ப்பும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

நிகழ்ச்சியில், அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேசுகையில், “தரமான மருத்துவ சேவைக்கு மூன்று விஷயங்கள் முக்கியத் தூண்களாக உள்ளன. மருத்துவப் பணியாளர்கள், மருத்துவக் கட்டமைப்பு மற்றும் சரியான தருணத்தில் விநியோகிக்கப்படும் மருத்துவப் பொருள்கள் ஆகியவை மூலம்தான் சிறந்த மருத்துவத்தை அளிக்க முடியும்.

**1994-ல் தோற்றுவிப்பு:** அந்த வகையில் மருத்துவப் பொருள்களை உரிய நேரத்தில் வழங்குவதை உறுதி செய்ய தமிழ்நாடு மருத்துவப் பணிகள்கழகம் கடந்த 1994-ல் தோற்றுவிக்கப்பட்டது. அதன் கீழ் மருந்துகள், மருத்துவ உபகரணங்கள் விநியோகிக்கப்படுவதுடன் 16 கதிர் வீச்சு மையங்களும், 9 லீனியர் ஆக்ஸலரேட்டர் எனப்படும் நவீன கதிர் வீச்சு சிகிச்சை மையங்களும், 11 டெலி கோபால்ட் சிகிச்சை மையங்களும், 39 எம்ஆர்ஐ மற்றும் 119 சிடி ஸ்கேன் மையங்களும் செயல்பட்டு வருகின்றன.

மக்களின் நலன் காக்க மருத்துவக் காப்பீடு, முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நல உதவி, மக்களைத் தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் என பலதிட்டங்கள் தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன" என்றார்

EVA STALIN IAS ACADEMY